25/04/2024 11:01 AM

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -6

ந.க.எண். 0477 / ஜெ2 / 2024, நாள். 24.04.2024.

822..................

பொருள்: தொடக்கக் கல்வி – அரசு / அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள் – அரசு / அரசு நிதியுதவிபெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்களினால் பாதிப்பு அடைந்தாலோ மாணவ / மாணவியரின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகை பெற்று வழங்குதல் – தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு கருத்துருக்கள் அனுப்புதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.17, பள்ளிக்கல்வி (ப.க.5(2)த் துறை, நாள். 07.02.2018

2. அரசாணை (நிலை) எண்.65, பள்ளிக்கல்வி (ப.க.5(2)த் துறை, நாள். 04.03.2024

www.Padasalai.Net

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு தொடக்கக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்படும், அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்கள் ஏற்பட்டு பாதிப்பு அடைந்தாலோ அவர்களின் பெற்றோர் / பாதுகாவலருக்கு நிவாரணத் தொகை வழங்கிட கருத்துருக்கள் சார்நிலை அலுவலர்களின் பரிந்துரையுடன் பெறப்பட்டு, அவை உரிய விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | விபத்தின் தன்மை | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | விபத்தில் மரணமடைந்த மாணவர்களுக்கு | ரூ.1,00,000/- |
| 2. | விபத்தில் பலத்த காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.50,000/- |
| 3. | விபத்தில் சிறிய காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.25,000/- |

இத்தகைய ஒவ்வொரு நிகழ்விலும் அரசிடம் இருந்து அரசாணைகள் பெற்ற பிறகே, பாதிப்பு அடைந்த குழந்தைகளின் பெற்றோர் / பாதுகாவலருக்கு உரிய நிவாரணத் தொகை பெற்று வழங்கப்பட்டு வந்தது. இதனால் அம்மாணவ / மாணவியரின் குடும்பத்திற்கு உரிய காலத்திற்குள் நிவாரணத் தொகை கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதால் நிவாரணத்

தொகையைப் பெற்று வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையில் தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின்கீழ் செயல்படும், அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர் தொடர்பான கோரிக்கை மனுக்களை பரிசீலித்து நிவாரணத் தொகையினை பெற்று வழங்குவதற்கு தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிட்டு உள்ளது.

மேற்படி அரசாணைகளின் நகல்கள் இத்துடன் இணைத்து அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் சார்பு செய்யப்படுகின்றது. இனி வரும் நிதியாண்டுகளில் இருந்து, இப்பொருள் சார்பாக பள்ளிகளிலிருந்து பெறப்படும் கருத்துருக்களை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) அரசாணைகளில் தெரிவித்துள்ள விதிகளைப் பின்பற்றி நன்கு பரிசீலித்து, நிவாரணத் தொகையினை உரிய காலத்திற்குள் பயனாளிகளுக்கு பெற்று வழங்கிடும் வகையில் முழுவடிவில் கருத்துருக்களை உடனுக்குடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

www.Padasalai.Net

மேலும் இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை உடன் அனுப்பி வைக்குமாறும் இச்செயல்முறையினை அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் சார்பு செய்து, அவர்களது ஒப்புகையினையும் பெற்று தங்கள் அலுவலகக் கோப்பில் வைக்குமாறும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :
அரசாணைகளின் மென்பிரதி

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)
நகல்–
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் (மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக)